National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 9 December 2016

### வெவ்வேறான விவகாரங்கள் தொடர்பில் சிங்கப்பூரர்களின் ஆதரவு மாறுபடுகிறது

# மரண தண்டனை தேவை; மக்கள் வலுவான ஆதரவு

பெரும்பாலான சிங்கப்பூரர்கள் மரண தண்டனையை ஆதரிக்கிறார்கள். இருந்தாலும் வெவ்வேறான விவகாரங்களில் அந்த ஆதரவின் அளவு மாறுகிறது.

புதிய ஆய்வு ஒன்றின் மூலம் இந்த விவரங்கள் தெரியவந்திருக்கின்றன.

கட்டாய மரண தண்டனையை ஆதரிக்கும் மக்களின் எண்ணிக்கை முன்பைவிட குறைவாக இருக்கிறது. மரணம் அல்லது காயம் எதுவும் ஏற்படாத போதைப் பொருள் கடத்தல், துப்பாக்கி தொடர்பான குற்றச்செயல்களுக்கு கட்டாய மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று விரும்பும் சிங்கப்பூரர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது.

சில குற்றச்செயல்களுக்கு கட்டாய மரண தண்டனையை சிங்கப்பூர் அண்மையில் அகற்றியது.

இதற்கு நான்கு ஆண்டுகள் கழித்து இந்த நிலவரம் தெரிய வந்திருக்கிறது. மரண தண்டனையைக் கைவிடுவதன் தொடர்பில் உலகளாவிய விவாதமும் நடந்திருக்கிறது.

சிங்கப்பூரில் போதைப்பொருள் கடத்தல், துப்பாக்கி தொடர்பான குற்றச்செயல்கள் போன்ற குறிப்பிட்ட குற்றச்செயல்களின் பேரில் குற்றவாளி என்று யாரேனும் தீர்மானிக்கப்பட்டால் அத்தகைய பேர்வழிகளுக்கு கட்டாய மரண தண்டனை விதிக்க முடியும்.

மரண தண்டனை என்பது கடுமையான தண்டனை என்பதால் அந்தத் தண்டனையைப் பயன்படுத்துவதன் தொடர்பில் தொடர்ந்து மறுபரிசீலனை நடத்துவது முக்கியமானது என்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சட்டப்படிப்பு இணைப் பேராசிரியர் சான் விங் சியோங் நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இந்தப் பேராசிரியரும் இதர இரண்டு பேரும் சேர்ந்து சுமார் 1,500 சிங்கப்பூரர்களை உள்ளடக்கி ஓர் ஆய்வை நடத்தினர். ஆய்வில் கலந்துகொண்டவர்களுக்கு வயது 18 முதல் 74 வரை. அந்த ஆய்வு இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கும் மே மாதத்திற்கும் இடையில் நடத்தப்பட்டது.

10 பேரில் ஏழு பேர் மரண தண்டனையை ஆதரிக்கிறார்கள்.

அரசாங்கத்தின் கருத்தறியும் பிரிவான ரீச் என்ற அமைப்பு அக்டோபர் மாதம் 1,160 பேரை உள்ளடக்கி ஓர் ஆய்வை நடத்தியது.

அதிலும் மரண தண்டனைக்கு கிடைத்த ஆதரவு இதேபோன்று இருந்தது.

ஆனால் ஒவ்வொரு குற்றச் செயல்களுக்கும் ஏற்ப இந்த ஆதரவு குறைகிறது என்பது இப்போதைய ஆய்வு மூலம் தெரிய வந்திருக்கிறது.

வேண்டுமென்றே, நோக்கத்துடன் கொலை செய்வோருக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டும் என்று 92% கூறுகிறார்கள். போதைப்பொருள் கடத்தல் குற்றத்திற்கு மரண தண்டனை வேண்டும் என்று கூறுவோர் 86%.

துப்பாக்கியைப் பயன்படுத்துவோருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று 88% கூறுகிறார்கள்.

இருந்தாலும் இதே குற்றங்களுக்கு கட்டாய மரண தண்டனை விதிக்க வேண்டுமா என்று கேட்டபோது கிடைத்த ஆதரவு வேறுபடுகிறது.

வேண்டுமென்றே கொலை செய்த குற்றத்திற்குக் கட்டாய மரண தண்டனை தேவை என்று கூறியவர்கள் 47%. இதர குற்றச் செயல்களுக்கு இந்த ஆதரவு அளவு முறையே 32% மற்றும் 36% ஆக இருக்கிறது.

பொதுவாகப் பார்க்கையில் முதிய வயது சிங்கப்பூரர்களும் மிகவும் கல்வி கற்றவர்களும் மரண தண்டனையைப் பெரும்பாலும் ஆதரிக்கிறார்கள்.

பல்வேறு சமயங்களுக்கிடையே பார்க்கையில் மரண தண்டனைக்கான ஆதரவு மாறுபடுகிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.